Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, OCTOMBER 19, 2023


வியாழக்கிழமை ஒக்டோபர் 19, 2023 | ஒளி: 09 கதிர்: 109 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## தமிழ் பிழையுடன் தனித்து எதிர்ப்பு

எம். றொசாந்த்

வடக்கு கிழக்கில் வெள்ளிக்கிழமை (08) முன்னெடுக்க அழைப்பு விடுக்கப்பட்டிருக்கும் ஹர்த்தாலுக்கு எதிர்ப்பு தெரிவித்து தனி நபரொருவர் புதன்கிழமை (18) போராட்டத்தை முன்னெடுத்தார்.

யாழ்ப்பாணம் அச்சுவேலி பகுதியிலிலேயே அவர் போராட்டம் நடத்தினார். அவர் ஏந்தியிருந்த



பதாகையில், தமிழ் எழுத்துப் பிழைகள் இருந்தனர். தலைக்கவசம் அணிந்திருந்த அவர், ஒரு சில நிமிடங்கள் போராட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து சென்றுவிட்டார்.

மருத்துவமனை மீது ரொக்கெட் தாக்குதல்

# காசாவில் அகோரம் 500 பேர் மாண்டனர்

இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பு திடீரென தாக்குதல் நடத்தியது. அத்துடன், பலர் பிணைக் கைதிகளாக பிடிக்கப்பட்டுள்ளனர். இதற்கு இஸ்ரேல் காசா மீது ஏவுகணைகளை வீசி பதிலடி கொடுத்து வருகிறது. இதனால் இரு பக்கமும் பலத்த உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இதற்கிடையே, வடக்கு காசாவில் தாக்குதல் நடத்துவதற்காக அங்குள்ள மக்களை தெற்கு காசாவுக்கு இடம்பெயரும் படி இஸ்ரேல் இராணுவம் அறிவுறுத்தியதன் பேரில்





இலட்சக்கணக்கான மக்கள் தெற்கு காசாவில் அடைக்கலம் புகுந்தனர்.

இந்நிலையில், இஸ்ரேல் போர் விமானங்கள் தெற்கு காசா மீது செவ்வாய்க்கிழமை (17) குண்டுகளை வீசின. இந்த தாக்குதலில் காசா நகரில் உள்ள அல் அஹ்லி அரபு மருத்துவமனையில் 500 பேர் கொல்லப்பட்டதாக ஹமாஸ் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும் ரபாவில் 27 பேரும், கான் யூனிசில் 30 பேரும் கொல்லப்பட்டதாகவும், 100க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

எனினும், மருத்துவமனை மீது தாங்கள் தாக்குதல் நடத்தவில்லை என்றும் அது பயங்கரவாதிகளின் செயற்பாடாகும் என்றும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

## "தேர்தலில் நாம் உறதி"

தேர்தலை நாம் இரத்து செய்யவில்லை. தேர்தல் நடத்துவது தொடர்பில் அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டிலேயே உள்ளதென பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் புதன்கிழமை (18) எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்ற தேர்தல் முறைமையில் திருத்தம் மேற்கொண்டு கலப்புத் தேர்தல் முறைமை ஒன்றைக் கொண்டு வருவோம் என நாட்டுக்கு தெரிவித்தே மக்கள் ஆணையை நாம் பெற்றுக் கொண்டுள்ளோம்.

தொடர்ச்சி P2

ஹர்த்தாலுக்கு

# "வராதிங்கோ"

புகஜிந்தன்

வெள்ளிக்கிமை 20ஆம் திகதி அரசியல் கட்சிகளால் வடக்கு, கிழக்கு மாகாணங்களை முடக்கி ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனினும், அந்த ஹர்த்தாலுக்கு எதிர்ப்பு தெரிவித்து தென்மராட்சி பகுதிகளில் புதன்கிழமை (18) துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

இந்த துண்டுப் பிரசுரங்களானது தென்மராட்சி மக்கள் உரிமை பாதுகாப்பு அமைப்பினால் விநியோகிக்கப்பட்டது.

இலங்கையில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் வடக்கு கிழக்கை முடக்கி ஹர்த்தால் போடுவதன் மூலம் பாதிக்கப்படுவது யார்? இந்த ஹர்த்தால் மூலம் தமிழ் மக்களுக்கு கிடைக்கப்போகும் தீர்வு என்ன?காலங்காலமாக போடப்பட்ட ஹர்த்தால் மூலம் தமிழ் மக்கள் அடைந்த இலாபம் என்ன? என்று கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன.

தெற்கை முடக்கினால் வரவேற்கத்தக்கது ஆனால் வடக்கு கிழக்கை முடக்கி மக்களை பாதிப்புக்குள்ளாக்கும் வகையில் செயற்படுவது வரவேற்கத்தக்கதன்று என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# "வாங்கோ"

புகஜிந்தன்

வடக்கு, கிழக்கு மாகாணம் தழுவிய நிலையில் பூரண ஹர்த்தால் முழு கடையடைப்பு போராட்டத்தை வெள்ளிக்கிழமை 20ஆம் திகதி நடத்துவதற்கு அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்துள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் சோ.மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் புதன்கிழமை (18) நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா உயிரச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியமை தொடர்பில் முழுமையான நீதியான விசாரணை நடத்த வலியுறுத்தியும், நீதித்துறையில் இருந்தாலும் தமிழர் என்பதால் இன ஒடுக்குமுறைக்கு உள்ளாகுவதை சுட்டிக்காட்டியும் - கண்டித்தும் தமிழ்த் தேசிய கட்சிகள் இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.




நீதித்துறையிலும் கூட தமிழ் மக்களுக்கு குறைந்தபட்ச நீதி இல்லை என்று சொன்ன நிலவரம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதற்காக தொடர்ச்சியாக தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறுபட்ட போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. சட்டத்தரணிகள் வடக்கு, கிழக்கு, கொழும்பு என்று இதற்காக போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழ் மக்களும் தொடர்ச்சியாக பல்வேறுபட்ட அமைப்புக்கள் அரசியல் கட்சிகள் இதற்கான போராட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கின்றன. பல வடக்கு, கிழக்கு மாகாண மக்களது கோரிக்கைகளுக்கு இணங்க நாங்கள் வருகிற 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை வடக்கு, கிழக்கு தழுவிய நிலையில் நாங்கள் ஒரு முழு கடையடைப்பு ஹர்த்தால் போராட்டத்தை நடத்துவதற்கு தீர்மானித்திருக்கின்றோம் என்றார்.

## "பார் வேண்டாம்"


ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன்- டிக்கோயா என்பீல்ட் ஓட்டேரி தோட்டத்தின் புதிய வீட்டுத் தொகுதியில் மதுபானக் கடை திறப்பதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதியிலுள்ள பல தோட்டத் தொழிலாளர்கள் புதன்கிழமை (18) வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2



## லெபனானில் இலங்கை பெண்ணொருவர் காயம்



லெபனானில் 4 மாடிக் கட்டிடமொன்று இடிந்து வீழ்ந்ததில் இலங்கைப் பெண் ஒருவர் காயமடைந்துள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. கம்பஹா, மிரிஸ்வத்தை பகுதியைச் சேர்ந்த 65 வயதான பெண் ஒருவரே காயமடைந்துள்ளார்.

லெபனானில் உள்ள பெரூப் நகருக்கு அருகில் உள்ள பகுதியில் 4 மாடிகளைக்கொண்ட கட்டிடம் இடிந்து விழுந்துள்ளது. இந்த கட்டிடத்தில் இலங்கை பெண் உள்ளிட்ட 5 பேர் சிக்கியுள்ளதாக தூதரகம் தெரிவித்திருந்தது.

## "யாரிடம் கேட்பது"

மட்டக்களப்பு மயிலத்தவனை - மாதவனை மேய்யச்சல் தரை விவகாரம் தொடர்பில் பொலிஸாருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ள போதும், தொடர்ச்சி P2



## "தேர்தல்களை நடத்தாது திருத்தவே முடியாது"

தேர்தல் முறை திருத்தங்களை செய்ய முன்னர் உள்ளூராட்சி, பாராளுமன்றம் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்றும், தேர்தல்களை நடத்தாது தேர்தல் முறை திருத்தங்களை செய்வதை அனுமதிக்க முடியாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் புதன்கிழமை (18) பிரதமரிடத்தில் கேள்விகளை எழுப்பி உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்ற தேர்தல் முறை மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடலுக்காக பிரதமரினால் எங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

IMF இன்

## 2ஆம் தவணை அடுத்த வாரம்

சர்வதேச நாணய நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய இரண்டாவது தவணை தொகை அடுத்த வாரம் கிடைக்கப்பெறும் என இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியுடனான பேச்சுவார்த்தை வெற்றிகரமான நிலையை எட்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், ''மிகவும் வெற்றிகரமாக பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. மிகக் கடுமையான பொருளாதாரப் படுகுழியில் விழுந்துவிட்டோம்.

தொடர்ச்சி P2

## "தாவுவதை தடுக்க தலையிடவும் "

கட்சித் தாவும் கலாசாரத்தை இல்லாது செய்யும் நடவடிக்கைகளுக்கு உயர்நீதிமன்றம் தலையிட வேண்டும் என்று கோரிக்கை விடுப்பதாக எதிர்க்கட்சி பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (18) நடைபெற்ற நீதித்துறை சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கட்சி மாறுபவர்களின் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை நீக்கும் தீர்ப்பொன்றை அண்மையில் உயர்நீதிமன்றம் வழங்கியிருந்தது. இது சிறந்த தீர்ப்பாகும். லலித் காமினி கட்சி மாறியதால் ஆசனத்தை இழந்த பின்னர் 31 வருடங்களின் பின்னர் இவ்வாறான தீர்ப்பு வந்துள்ளது. இப்போது கட்சிக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. கட்சி உறுப்புரிமையில் இருந்து ஒருவர் நீங்கினால், அவரின் பாராளுமன்ற ஆசனம் இல்லாமல் போகும். இதுவே சட்டம்.

பெருமளவானோர் கட்சித் தாவி தங்களுக்கு மக்கள் வழங்கியுள்ள ஆணையை மீறினர். தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# "பார் வேண்டாம்"

என்ஃபீல்ட், ஒட்டேரி, இன்ஜெஸ்ட்ரி மற்றும் பல தோட்டங்களைச் சுற்றியுள்ள தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்,

மேலும் நாட்டில் வாழ்க்கைச் செலவுகள் மிகவும் அதிகரித்துள்ளதாகவும், தேயிலை தோட்ட வேலையில் கிடைக்கும் சம்பளத்தில் குடும்ப செலவுகளை நடத்த முடியாதுள்ளது. இந்நிலையில் மதுக்கடை திறந்தால் மேலும் பல பொருளாதார பிரச்சனைகளை சந்திக்க நேரிடும் என்றும் குற்றஞ்சாட்டினர்.

அப்பகுதி தோட்ட தொழிலாளர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் மதுவுக்கு அடிமையாகிவிடுவார்கள் என்றும் எச்சரித்துள்ளனர்.

**புதிய மதுபானசாலைகளை திறக்காமல், பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட தங்களின் வாழ்க்கை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கவும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்**



# "யாரிடம் கேட்பது"

இன்னும் அதன்படி பொலிஸார் செயற்படவில்லை என்று தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம், நாட்டில் பொலிஸ்மா அதிபர் இல்லாத நிலையில், யாரிடம் இது தொடர்பில் கேட்பது என்ற கேள்விகள் நிலவுகின்றது என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (18) ஒழுங்குப் பிரச்சினையொன்றை முன்வைத்தே சாணக்கியன் இராசமாணிக்கம் இவ்வாறு தெரிவித்தார்.



நாட்டின் ஜனாதிபதி தற்போது நாட்டில் இல்லை. நாட்டின் பொலிஸூக்கு பொறுப்பான அமைச்சரும் நாட்டில் இல்லை. அத்துடன் பொலிஸ்மா அதிபரின் நியமனமும் சட்டவிரோதமானது, அதற்கு அரசியலமைப்பு பேரவையின் அனுமதி கிடைக்கவில்லை என்று ஒரு தரப்பு கூறுகின்றது. இதேவேளை ஜனாதிபதி வெளிநாடு செல்லும் போது நியமிக்கப்படுபவர்களை அரசியலமைப்பு பேரவையால் நீக்க முடியாது என்று இன்னுமொரு தரப்பு கூறுகின்றது.

இதேவேளை ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி கூட்டமொன்றை நடத்தி கூறிவற்றை இன்று வரையில் பொலிஸாரால் மட்டக்களப்பில் செயற்படுத்தவில்லை. பொலிஸ்மா அதிபர் இல்லாத நேரத்தில் நாங்கள் பிரச்சினைகளை யாரிடம் கூறுவது என்று வினவினார்.

# "தேர்தலில் நாம் உறதி"

அது தொடர்பில் எமது அரச தலைவர்கள் இந்த பாராளுமன்றத்தில் பல தடவைகள் விடயங்களைத் தெ ரிவித்துள்ளார்கள்.



நாம் வரவு செலவுத் திட்டத்திற்கு அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் போதும் தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பிலும் பாராளுமன்றத்தில் இரு தரப்பினரும் கேட்டுக்கொண்டதாக சபையில் பதிவுசெய்ய ப்பட்டுள்ளது. அதனை செயற்படுத்துவது தொடர்பில் பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றை கலப்பு முறையில் நடத்துவது தொடர்பான யோசனைகள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்ப ட்டுள்ளது.

தேர்தலை இரத்து செய்யுமாறு ஆளும் கட்சியைப் போன்று எதிர்க்கட்சியினர் சிலரும் எம்மிடம் வேண்டுகோள் விடுத்தனர். பாராளுமன்றத்திலும் அதற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அந்த வகையில் நாம் உண்மைத் தன்மை யுடனேயே செயல்படுகின்றோம் என்றார்.

# "தேர்தல்களை நடத்தாது திருத்தவே முடியாது"



உள்ளூராட்சித் தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் மாகாண சபைகள் தேர்தல் ஆகியவற்றை ஒத்தி வைக்கும் செயற்பாடுகளையே அரசாங்கம் முன்னெடுக்கின்றது.

மக்களின் மனித உரிமைகளை மீறுவதாகவே இது அமையும். முதலில் மக்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கிவிட்டு தேர்தல் திருத்தம் தொடர்பில் கதைப்போம் என்றார்.

தேர்தல் முறைமையை மாற்றுவதாக கூறி மக்களின் வாக்குரிமையை மீறுவதற்கு இடமளிக்க முடியாது. இதனால் ஐக்கிய மக்கள் சக்தியான நாங்கள் குறித்த கலந்துரையாடலில் கலந்துகொள்ள மாட்டோம்.

நீங்கள் உண்மைத் தன்மையுடன் தேர்தல் மறுசீரமைப்புகளை முன்னெடுப்பதாக இருந்தால் உள்ளூராட்சி, பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அவற்றை செய்யலாம் என்றார்.

# "தாவுவதை தடுக்க தலையிடவும் "

அரசியலமைப்பின் பிரகாரம் கட்சி உறுப்புரிமையில் இருந்து நீக்க முடியும். ஆனால் உயர்நீதிமன்றத்திற்கு சென்று தடையுத்தரவை பெற்றுக்கொள்ள முடியும். இதன்படி 31 வருடங்களாக அவர்களின் ஆசனங்களை இல்லாமல் செய்யும் தீர்ப்பு வெளியானதில்லை.

எதிர்க்கட்சியில் இருந்து அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க முடியும். இதற்காக கட்சித் தாவத் தேவையில்லை. எவ்வாறாயினும் உயர்நீதிமன்றம் தற்போது வழங்கியுள்ள தீர்ப்பு வரலாற்று முக்கியமானது. இந்நிலையில் கடந்த காலங்களை மறந்து தற்போதைய அரசியல் கலாசாரத்தை சுத்தப்படுத்த உயர்நீதிமன்றம் தலையிட வேண்டும் என்ற கோரிக்கையை விடுக்கின்றேன் என்றார்.



# 2ஆம் தவணை அடுத்த வாரம்

சில விஷயங்களில் உடன்பாடுகளில் தாமதம் ஏற்படுகிறது. அவை அனைத்தும் வெற்றியடையும். இரண்டாம் தவணை வழங்கும் தொகையை மிக விரைவில் பெறலாம் என நம்புகிறேன்." என குறிப்பிட்டார்.

மேலும் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, சுங்க அதிகாரிகளின் பாதுகாப்பை அதிகரிப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# "4/21 தெரிவுக்குழு காலத்தை இழுத்தடிக்கும்"

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் தெரிவுக்குழு என்ற பெயரில் காலத்தை இழுத்தடித்து உண்மைகளை மூடி மறைத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்காதிருக்கும் செயற்பாடுகளை தாம் கண்டிப்பதாக ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (18) நடைபெற்ற நீதித்துறை சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் நீதி, நியாயம் இல்லாவிட்டால் சமூகம் விழுந்துவிடும். நாட்டில் சட்டம் வேண்டியளவு இருந்தாலும் அது செயற்படுத்த ப்படுவதில்லை. இதற்கு உதாரணமாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலை குறிப்பிடலாம். அது தொடர்பில் விசாரணை நடப்பதாக கூறினாலும். இதுவரையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவும் இல்லை. குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைக்கவும் இல்லை என்றார்.

இந்நிலையில் முறையாக விசாரணை நடத்தாது பாராளுமன்றத்தில் போலியான தெரிவுக்குழுவை அமைத்து



காலத்தை வீணடிப்பதிலும் அர்த்தமில்லை. குற்றத்திற்கு பொறுப்பானவர்களை தெரிவுக்குழுவின் தலைமைப்பதவிகளில் நியமிப்பதாலும் நீதியை எதிர்பார்க்க முடியாது. தாக்குதல் தொடர்பில் புலனாய்வு பிரதானியே இதில் பிரதான நபரென கூறினாலும் அவர் இன்னும் அந்தப் பதவியில் இருக்கின்றார். முன்னரும் பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட்டது. இதனால் எந்தப் பிரயோசனமும் கிடையாது. எவ்வாறாயினும் நாங்கள் இந்த குழுவில் இணையவும் மாட்டோம் என்றார்.

# IMF உறுதிமொழிகளில் 40ஐ மட்டுமே இலங்கை நிறைவேற்றியுள்ளது

சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் 17 வது திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட 100 உறுதிமொழிகளைக் கண்காணிக்கும் இணையவழித் தளமான வெரிட்டே ரிசர்ச்சின் 'IMF கண்காணிப்பான்' இன் சமீபத்திய புதுப்பிப்பு, 2023 செப்டம்பர் இறுதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய 71 கண்காணிக்கக்கூடிய உறுதிமொழிகளில் 40 ஐ மட்டுமே இலங்கை நிறைவேற்றியுள்ளது என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

அதே நேரத்தில், மார்ச் மாதம் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து, செயல்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகிய இரண்டிலும் இலங்கை அதன் மிகக் குறைந்த நிலையை எட்டியுள்ளது என்பதையும் இது வெளிப்படுத்தியுள்ளது.

ஏனெனில், செப்டம்பர் மாத இறுதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய உறுதிமொழிகளில் சுமார் 30% நிலை அறியப்படாத நிலையில் உள்ளது, மேலும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்த அரசாங்கம் நிறைவேற்றியிருக்கவேண்டிய நான்கு உறுதிமொழிகளில் மூன்று நிறைவேற்றப்படவில்லை.

சமீபத்திய தரவு இலங்கையின் IMF திட்டத்தில் "வெளிப்படைத்தன்மையில் இரட்டை பற்றாக்குறையை " வெளிப்படுத்துகிறது. இதில் (அ) திட்டத்தின் முன்னேற்றத்தில் பெருகிவரும் வெளிப்படைத்தன்மையின்மை மற்றும் (ஆ) அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை உயர்த்துவதை ஊக்குவிக்கும் IMF உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் பெருகிவரும் தோல்வி ஆகியவை அடங்கும்.

அறியப்படாத உறுதிமொழிகளின் எண்ணிக்கை ஆகஸ்ட் மாதத்தில் சுமார் 20% ஆக இருந்த நிலையில், முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அது 30% ஆக உயர்ந்துள்ளது. அதிகரித்து வரும் இந்த வெளிப்படைத்தன்மையின்மை இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் செயல்திறன் ஆகிய இரண்டிலும் பொது மற்றும் நிறுவன நம்பிக்கையை அழிக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது.

நிர்வாகக் குழு அளவிலான ஒப்பந்தத்தைத் தொடர்ந்து ஏழு மாதங்களில், வெளிப்படைத்தன்மையை கட்டாயமாக்கும் பெரும்பாலான தேவைகள் நிறைவேற்றப்படவில்லை. "வருவாய்கள், செலவுகள் மற்றும் நிதி ஆகியவற்றின் மாதாந்த பணப்புழக்கத்தை அடுத்த மாதத்தின் மூன்றாவது வணிக நாளுக்குள் அரச கணக்குகள் திணைக்களம் அறிக்கையிட வேண்டும்" என்ற உறுதிமொழி ஒரு சமீபத்திய உதாரணமாகும், இணையவழி நிதி வெளிப்படைத்தன்மை தளத்தை உருவாக்குவது மற்றொரு எடுத்துக்காட்டாகும்.

இது மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டியது, ஆனால் செப்டம்பர் மாத இறுதியில் கூட அது நிறைவேற்றப்படவில்லை. அத்தகைய ஒரு தளத்தின் தேவை இலங்கைக்காக வெளியிடப்பட்ட நிர்வாக பகுப்பாய்வுகள் இரண்டிலும் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டது - ஒன்று இலங்கையின் சிவில் சமூகத்தால், மற்றொன்று சர்வதேச நாணய நிதியத்தால் வெளியிடப்பட்டது. அரசாங்கத்தால் பூர்த்தி செய்யப்பட்ட ஒரே வெளிப்படையான உறுதிமொழி சர்வதேச நாணய நிதியத்தின் ஆளுகையைக் கண்டறியும் அறிக்கையாகும், ஆனால் அதுவும் சர்வதேச நாணய நிதியத்தால் வெளியிடப்பட்டதே.

ஒரு ஜனநாயக கட்டமைப்பிற்குள் வெளிப்படைத்தன்மை பொதுவான பொறுப்புக்கூறலின் அடித்தளத்தை உருவாக்குகிறது. எவ்வாறாயினும், IMF கண்காணிப்பானின் தரவுகள் இலங்கைக்கு வெளிப்படைத்தன்மையில் இரட்டைப் பற்றாக்குறை இருப்பதாக சுட்டிக்காட்டுகின்றன.

# "நீதிபதியின் இராஜினாமாவை ஆணைக்குழு ஏற்கவில்லை"



முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் கடிதத்தை நீதிச்சேவை ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளவில்லை. அதேவேளை நீதிபதி டி.சரவணராஜாவுக்கு சட்டமா அதிபர் அச்சுறுத்தல் விடுத்ததாக வெளியாகிய செய்திகள் அடிப்படையற்றவை. இந்த நீதிபதிக்கு உயிரச்சுறுத்தல் இருக்கவில்லை என நீதிச்சேவை ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பித்து ள்ளது என நீதி,அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (18) இடம்பெற்ற நீதித்துறைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சரவணராஜா 2023.09.23 ஆம் திகதி நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி அதில் 'உயிரச்சுறுத்தல் மற்றும் மன அழுத்தம் காரணமாக தான் பதவி விலகுவதாக குறிப்பிட்டுள்ளார்.

நீதிபதிகளுக்கு மனஅழுத்தம் இருப்பது வழமை ,மன அழுத்தத்தால் பதவி விலகுவதாக இருந்தால் இலங்கையிலுள்ள சகல நீதிபதிகளும் பதவி விலக நேரிடும். நீதிபதிகளுக்கு மாத்திரமல்ல சட்டத்தரணிகளுக்கும் மன அழுத்தம் உள்ளது.பாராளுமன்றம் வரும் எமக்கும் மன அழுத்தம் உள்ளது.சபாபீடத்தில் அமர்ந்துள்ள சபாநாயகருக்கும் மன அழுத்தம் உள்ளது. அவ்வாறானால் அவரும் பதவி விலக நேரிடும்.

தனக்கு ஏற்பட்டுள்ள உயிரச்சுறுத்தல் காரணமாக பதவி விலகுவதாக நீதிபதிகடிதத்தில் குறிப்பிட்டுள்ள போதும் அது எந்தவகையான த, யாரால் விடுக்கப்பட்டது என்பது தொடர்பிலோ ,தனக்கு ஏற்பட்டுள்ளது எந்த வகையான மன அழுத்தம் என்பது தொடர்பிலோ எதுவுமே குறிப்பிடவில்லை. தனக்கு உயிரச்சுறுத்தல் இருந்தால் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரம் நீதிபதிக்கு முழுமையாக வழங்கப்பட்டுள்ளது. உயிரச்சுறுத்தல் விடுத்த நபருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்க முடியும். ,பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்க முடியும்..அந்த அதிகாரம் எமக்கு கூட இல்லை.ஆனால் அவர் எந்த அதிகாரத்தையும் பயன்படுத்தவில்லை என்றார்.

# வடக்கில் 9543 ஏக்கர் காணி படையினரால் அபகரிப்பு

■ நிதர்ஷன் வினோத்

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள அரச மற்றும் தனியார் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் முப்படைகள், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பில், பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாகத் திரட்ட முடிந்த தகவல்களைக் கொண்டு, தன்னால் தயாரிக்கப்பட்ட விவரண அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 4378.8 ஏக்கரும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 2433.79 ஏக்கரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 1578.27 ஏக்கரும், வவுனியா மாவட்டத்தில் 1021.55 ஏக்கரும், மன்னார் மாவட்டத்தில் 130.77 ஏக்கருமாக வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் 9543.18 ஏக்கர் காணிகள் படையினரால் அபகரிக்கப்பட்டுள்ளதாக அவரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# “ஆப்பு வைக்க முயற்சி”



தேர்தல் முறையை மாற்றி தமிழ் பேசும் பிரதிநிதித்துவங்களுக்கு ஆப்பு வைப்பேன் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சொல்லாமல் சொல்கிறார் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில், நடைபெற்ற, தமிழ் முற்போக்கு கூட்டணி அரசியல் குழு கூட்டத்தின் பிறகு ஊடகவியலாளர்களை சந்தித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெப்ரவரி 4ஆம் திகதி க்கு முன், தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு, 13A அமுல், 13Aஇல் பொலிஸ், காணி பிரச்சினைக்கு தீர்வு என ஜனாதிபதி விக்ரமசிங்க வாக்குறுதி அளித்தார்.

விக்கினேஸ்வரன் எம்.பியை துணைக்கு அழைத்துக்கொண்டு வடக்கில் மாகாண நிர்வாக குழு அமைப்போம் என வாக்குறுதி அளித்தார். தொல்பொருள் திணைக்களத்தை அழைத்து காணிகளை விடுவியுங்கள் என கட்டளை இட்டார். திணைக்களத்தின் பணிப்பாளர் பதவி விலகினாரே தவிர ஜனாதிபதியின் கட்டளை நிறைவேற்றவில்லை.

பிறகு அவரது அரசாங்கம் தேர்தல்களை பின்போட சர்வஜன வாக்கெடுப்பு என்று பேசுகிறது. இப்போது ஜனாதிபதி முறைமையை அகற்ற போகிறேன் என்கிறார். முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவை துணைக்கு அழைத்துக்கொண்டு பாராளுமன்ற தேர்தல் முறையை மாற்றி தமிழ் பேசும் பிரதிநிதித்துவங்களுக்கு ஆப்பு வைப்பேன் என சொல்லாமல் சொல்கிறார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சீனாவில் இருந்து நாடு திரும்பியவுடன் அவரை சந்தித்து தனிப்பட்ட முறையில் சில கேள்விகளை எழுப்பவுள்ளேன்.

மேலும், வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமை தொடர்பில், வெளியே சொல்ல முடியாத காரணங்கள் இருந்தாலும் அவர் என்னிடம் சொல்வார் என நம்புகிறேன் என்றார்.

# ATM யை உடைத்து திருடிய மூவர் சிக்கினர்

ரஸீன் ரஸ்மின்



புத்தளம் - மதுரங்குளி பிரதேசத்திலுள்ள வங்கியொன்றில் பணம் பெறும் தானியக்க இயந்திரத்தை (ATM) சனிக்கிழமை (07) இரவு உடைத்து பணத்தை கொள்ளையடித்த குற்றத்திற்காக தேடப்பட்டு வந்த மூவரை பொலிஸார் செவ்வாய்க்கிழமை (17) கைது செய்துள்ளனர்.

மதுரங்குளிய 10 ஆம் கட்டையிலுள்ள தனியார் வங்கியொன்றுக்கு சொந்தமான (ATM) இயந்திரத்தில் ஒரு கோடி ரூபாவிற்கும் அதிகமான பணத்தை கொள்ளையடிக்கப்பட்டது.

கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் மீதமுள்ள 92 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ATM இயந்திரத்தின் பராமரிப்பு பணியாளர்கள் போல் நடித்து, யாருக்கும் சந்தேகம் வராத வகையில், மிகவும் தந்திரமாக திறப்பு ஒன்றினால் குறித்த (ATM) இயந்திர பிரதான கதவை திறந்து, உரிய ரகசிய எண்களை பயன்படுத்தி, சுமார் ஒரு கோடிக்கும் அதிகமான பணத்தை கொள்ளையர்கள் திருடிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தனியார் வங்கியின் பாதுகாப்பு மற்றும் பண பரிவர்த்தனைக்கு பொறுப்பான தனியார் பாதுகாப்பு பிரிவில் கடமையாற்றும் அனுராதபுரம் மற்றும் கல்கமுவ பகுதிகளைச் சேர்ந்த இருவரும் , அநுராதபுரத்தில் வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் கடுகஸ்தோட்டை பிரதேசத்தை சேர்ந்த மற்றுமொரு நபருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.



# 10 மோட்டார் குண்டுகள் மீட்பு

பு.கஜிந்தன்

கிடைத்த தகவலுக்கு அமைய, பூநகரி பகுதியிலிருந்து பத்து மோட்டார் குண்டுகள் அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டு, புதன்கிழமை (18) செயலிழக்கப்பட்டுள்ளது.

ஸ்தலத்துக்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸார் 60MM குண்டுகள் 08, 04 MM 01 குண்டொன்று, கைக்குண்டொன்று ஆகியன அவதானித்துள்ளனர். அவை தொடர்பில் அதிரடிப்படையினருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அதன்பின்னர் நீதிமன்ற அனுமதியுடன் அவை அழிக்கப்பட்டன.




# குட்டி யானையுடன் கொழும்பில் போராட்டம்

யானை, மனித மோதலைத் தீர்ப்பதற்கான தேசிய செயற்திட்டத்தை உடனடியாக அமுல்படுத்துமாறு கோரி பல சிவில் அமைப்புக்கள் மற்றும் சுற்றாடல் அமைப்புக்களின் பிரதிநிதிகள் குழுவொன்று கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தை புதன்கிழமை (18) காலை நடத்தியுள்ளது.

இந்த வருடத்தின் முதல் 10 மாதங்களில் ஏறக்குறைய 300 யானைகள் கொல்லப்பட்டுள்ளதாகவும் யானைகளுக்கும் சுதந்திரமாக வாழ உரிமை உண்டு எனவும் யானைகள் அழிவில் இருந்து காப்பாற்றப்பட வேண்டும் எனவும் இல்லையெனில் யானைகள் எதிர்காலத்தில் புகைப்படங்களில் மட்டுமே காணப்படுமெனவும் போராட்டத்தில் ஈடுபட்ட குழு சுட்டிக்காட்டியுள்ளது.

யானைகள் - மனித மோதலினால் ஹக்க பட்டாசுகளினால் 651 மரணங்கள் பதிவாகி உள்ளதாக அக்குழு சுட்டிக்காட்டியது. மேலும், யானைக் காணிகளை பாதுகாக்குமாறும், யானை வழித்தடங்களைத் தடுக்க வேண்டாம் என்றும் வனப் பாதுகாப்பு அதிகாரிகளை பிரதிநிதிகள் குழுவினர் கேட்டுக் கொண்டனர்.

இந்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், சிறிய யானையொன்றையும் நிர்மாணித்து, போட்டத்தில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கேக் வெட்டிய மேலும் ஐவர் கைது

எம்.றொசாந்த்



யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்து, அவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் விதமாக கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடிய கும்பலைச் சேர்ந்த மேலும் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு 50க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிளில் வந்த 150க்கும் மேற்பட்ட இளைஞர்கள் சட்டவிரோதமான முறையில் கூட்டம் கூடி பிறந்தநாள் கொண்டாடி, மக்களின் இயல்பு வாழ்வுக்கு இடையூறு ஏற்படுத்தியதுடன், மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்துகொண்ட குற்றச்சாட்டின் கீழ் கொண்டாட்டத்தில் ஈடுபட்டவர்களில் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரை நீதவான் முன்னிலையில் முற்படுத்தியபோது, அவர்களை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதவான், சம்பவத்துடன் தொடர்புடைய அனைவரையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பணித்திருந்தார்.

அதற்கமைய அனைவரையும் கைது செய்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்த நிலையில், மேலும் ஐவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# நினைவு நாளன்று வீட்டுக்குச் சேதம்



பு.கஜிந்தன்


முகமாலை பகுதியில் வீடொன்று இனம் தெரியாத விஷமிகளால் சேதமாக்கப்பட்ட சம்பவம் புதன்கிழமை (17) இடம்பெற்றுள்ளது.

முகமாலை பகுதியில் கடந்த 45 நாட்களுக்கு முன்னர் வன்முறை சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. அதில் ஒருவர் மரணமடைந்தார். அவரது 45 ஆம் நாள் நினைவு புதன்கிழமை (17) இடம்பெற்றது.

இந்நிலையில் குறித்த வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஒருவரது வீட்டின் மீதே குறிப்பிட்ட தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 45 நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களுடன் தொடர்புஜடய பலர் கைது செய்யப்பட்டு தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# நீதிமன்ற நிலக்கீழ் களஞ்சியசாலை உடைப்பு



கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தின் நிலக்கீழ் வழக்குக் களஞ்சியசாலையில் செவ்வாய்க்கிழமை (17) இரவு இரண்டாவது தடவையாகத் திருடர்கள் புகுந்துள்ளதாக வாழைத்தோட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலக்கீழ் களஞ்சியசாலையைத் திருடர்கள் கடந்த 6ஆம் திகதி உடைத்துள்ளதாக கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தின் பிரதான பதிவாளர் வாழைத்தோட்ட பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து, இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸாரும் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை (17) இந்தக் களஞ்சியசாலைக்குள் புகுந்த திருடர்கள், கதவுக்கு உள்ளேயும் வெளியேயும் போடப்பட்டிருந்த நான்கு பூட்டுகளையும் உடைத்து, கதவு திறக்கப்பட்டுள்ளதாக நீதிமன்ற அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலக்கீழ் பெட்டிக் கிடங்கில் பழைய வழக்குகள் தொடர்பான வழக்குப் பொருட்கள், தங்கப் பொருள்கள் அடங்கிய பல பெட்டகங்கள், துப்பாக்கிகள், ஆயுதங்கள் உள்ளிட்டவை வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

மிகவும் பழைய வழக்குக் கோப்புகளைக் கொண்ட இந்தக் கிடங்கில் உள்ள வழக்குகள், பொருட்கள் மற்றும் புத்தகங்கள் தொடர்பாகக் குறிப்பாக ஆவணப்படுத்தப்படவில்லை என்று நீதித்துறை அதிகாரி மேலும் கூறியுள்ளார்.

# “தேர்தலை நடத்திக் காட்டவும்”



உண்மைத் தன்மையுடன் அரசாங்கம் நடந்துகொள்ளுமாக இருந்தால் உள்ளூராட்சித் தேர்தலை நடத்திக் காட்டுமாறு எதிர்க்கட்சி பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல சவால் விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (17) தேர்தல் முறை மறுசீரமைப்பு தொடர்பாகக் கருத்து முன்வைத்து உரையாற்றும் போதே லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டும் என்று நீண்ட காலமாகக் கதைக்கப்படுகின்றது. ஆனால், தங்களால் தேர்தலில் வெற்றிபெற முடியாதென்றால் அதனைச் செய்ய எந்த அரசாங்கமும் முன்வருவதில்லை. ஆனால் இந்த தேர்தலில் தோற்போம் என்பதனாலேயே அதனைச் செய்ய முயற்சிக்கின்றது.

அரசாங்கம் உண்மைத் தன்மையுடன் செயற்படுகின்றது என்றால் உள்ளூராட்சி தேர்தலை நடத்திக் காட்டுங்கள். நவம்பர் 4ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது என்றார்.

> **“ தங்களால் தேர்தலில் வெற்றிபெற முடியாதென்றால் அதனைச் செய்ய எந்த அரசாங்கமும் முன்வருவதில்லை.**

# மது போதையால் ரயிலுக்கு பலியானார்



ஹஸ்பர்

திருகோணமலை - தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பொத்தானை பகுதியில், கொழும்புக்கு செல்லும் ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்த சம்பவமொன்று செவ்வாய்க்கிழமை (17) பதிவாகியுள்ளது.

முள்ளிப்பொத்தானயை சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான தாவூது சலீம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மூவர் மது அருந்திவிட்டு வீடு திரும்பியுள்ளதாகவும் இதன்போது குறிப்பிட்ட நபர் குடிபோதையில் தண்டவாளத்தில் உறங்கியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் கந்தளாய் தளவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பிரேதப் பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஹர்த்தாலுக்கு அழைத்து துண்டுப்பிரசுரம் விநியோகம்

க. அகரன்

வெள்ளிக்கிழமை (20) முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் போராட்டம் தொடர்பாக தமிழ்த் தேசிய கட்சிகளின் கூட்டமைப்பால் வவுனியா நகரில் துண்டு பிரசுரங்கள் புதன்கிழமை (18) விநியோகிக்கப்பட்டது.

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா மீதான அச்சுறுத்தலின் மூலம் நீதித்துறை சுயாதீனமாக செயற்பட முடியாத நிலைமை, வடக்கு, கிழக்கில் பௌத்த மயமாக்கல், தமிழர் பிரச்சினைக்கு உள்நாட்டில் நீதியைக் காணமுடியாது போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடங்கி 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஹர்த்தால் முன்னெடுக்கப்படவுள்ளது.

துண்டுப் பிரசுர விநியோகத்தின்போது, வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் நகரசபை தலைவர் இ.கௌதமன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், முன்னாள் நகரசபை உறுப்பினர் சந்திரகுலசிங்கம் எனப் பலரும் கலந்து கொண்டு துண்டுப் பிரசுரங்களை வழங்கினர்.

# கந்தபளையில் பாரிய மண்சரிவு

ஆ. ரமேஷ்

கந்தப்பளை - இராகலை பிரதான வீதியில் பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் குறித்த வீதியூடான போக்குவரத்துக்குத் தடை ஏற்பட்டுள்ளது.

எனவே இந்த வீதியூடாக விவசாய காணிகள் மற்றும் குடியிருப்புகளுக்கு பயணிக்கும் பொதுமக்கள், மாற்று வழியைப் பயன்படுத்துமாறு கந்தப்பளை பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் கொங்கோடியா தோட்ட பகுதியில் புதிதாகப் புனரமைக்கப்பட்டு செப்பனிடப்பட்ட வீதியிலும் பாரிய மண்சரிவு அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.



# மரணித்துவிட்ட மனிதாபிமானமும் மரண தாண்டவமும்

இஸ்ரேல் இராணுவத்துக்கும் ஹமாஸ் இயக்கத்துக்கும் இடையிலான யுத்தம் இன்று நேற்று ஆரம்பிக்கப்பட்ட ஒன்றல்ல. எனினும், ஒக்டோபர் 7ஆம் திகதியன்று ஹமாஸ் இயக்கத்தினர் நடத்திய தாக்குதலை அடுத்து இருதரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட போருக்கு இன்றுடன் 13 நாட்கள் ஆகின்றன. அதில், பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும், 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் காயமடைந்தும் , பெரும்பாலானவர்கள் அங்கவீனமடைந்தும் உள்ளனர்.

காசாவில் மருத்துவ மனையின் மீது இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதனால், அங்கிருந்தவர்களில் 500க்கும் மேற்பட்டோர் பலியெடுக்கப்பட்டுள்ளனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். யுத்த நியதியை அப்பட்டமாக மீறியே இந்தத் தாக்குதலை இஸ்ரேல் மேற்கொண்டுள்ளது. இதனையடுத்து, பயணக்கைதிகளாக தாங்கள் பிடித்துவைத்திருந்த பல நாடுகளைச் சேர்ந்தவர்களையும் ஹமாஸ் பலியெடுக்கத் தொடங்கியுள்ளதென வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையே காசாவுக்கான உணவு, மின்சாரம், குடிநீர் என அனைத்து அடிப்படைத் தேவைகளையும் இஸ்ரேல் நிறுத்தியுள்ளது. இதனால், காசா மக்கள் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். உணவு, குடிநீர் இன்றி திணறி வருகின்றனர். வைத்தியசாலைகளில் குவியும் பிணங்களை பாதுகாக்க முடியாமையால், ஐஸ்கிரீம் வண்டிகளில் வைத்து பாதுகாக்க வேண்டிய நிர்ப்பந்தம் காசா வைத்திய துறைக்கு ஏற்பட்டுள்ளது.

மருத்துவமனை சவக்கிடங்குகளில் உடல்களை வைப்பதற்கு இடமில்லை. எனவே, குழந்தைகளின் உடல்களை ஐஸ்கிரீம் வேன்களில் உள்ள குளிர்சாதன பெட்டிகளில் வைத்து வருகிறோம். உடல்களை வைப்பதற்கான சிறப்பு பைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது என்று ஐ.நா. சபையின் பாலஸ்தீன அகதிகள் அமைப்பின் தலைவர் பிலிப் அந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

காசா மக்களுக்கான உரிமை குரல் உலகளவில் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கின்றது. எனினும், இஸ்ரேலின் கரங்களை பலப்படுத்தும் செயற்பாடுகளை ஓரிரு நாடுகள் முன்னெடுத்து வருகின்றன. பெரும்பாலான உலக நாடுகள் சமாதானத்தையே வலியுறுத்தி நிற்கின்றன. எனினும், அங்கு மரண தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கின்றது. அப்பாவி பொதுமக்கள் இலக்கு வைத்து தாக்கப்படுகின்றனர்.

இஸ்ரேலின் தாக்குதல் தீவிரமடைந்து வருவதால், காசா மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை கொண்டு சேர்ப்பது சர்வதேச மனிதாபிமான அமைப்புகளுக்கு பெரும் சவாலாகவே உள்ளது. இந்தச் சூழலில்தான் காசா மக்களுக்கு அடிப்படை உதவிகளை வழங்குவதற்கான வாய்ப்புகள் உடனடியாக ஏற்படுத்தப்படவேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

இஸ்ரேல்- காசாவுக்கு இடையில் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இந்த கோர மரணத்தாண்டவம், மூன்றாம் போருக்கு வித்திட்டுவிடக்கூடாது என்பதில் சகலரும் கவனமாக இருக்கவேண்டும். எனினும், தாங்கள்தான் தர்மத்தின் நாயகன், சமாதானத்தின் புறா என்றெல்லாம் இனங்காட்டிக்கொண்டிருக்கும் இரும்பு சப்பாத்துக்களை அணிந்திருப்போர், காசாவில் தாண்டவமாடிக் கொண்டிருக்கும் பேரவலத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, மனிதாபிமானத்தை நிலைநாட்டுவதற்கு முன்வரவேண்டும் என வலியுறுத்துக்கின்றோம்.

இவையெல்லாம் செவிடன் காதியில் ஊதிய சங்காகவே இரும்பு சப்பாத்துக்காரனுக்கு இருக்கும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

ஒவ்வொருவருக்கும் நோய் வருவதும் அது பின்னர் குணமடைவதும் சாதாரணமானது. சிலநேரங்களில் கடுமையான நோய்களும் தாக்கிவிடுவதுண்டு. அப்பொழுது குடும்பத்தினர் வழிபாடு செய்வதால் நோய் குணமாகியவுடன், அது இறைவன் செயலாகும் என நிம்மதியாக பெருமூச்சு விடுவதுண்டு.

கடவுள் மனிதர்களைத் தொடர்ந்தும் துன்பப்படுத்துவ தில்லை. இயற்றையை நம்புங்கள்! அதன் மாற்றங்கள், உடல்நிலையின் ஆரோக்கியத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும். நோய்கள் வருவது சாதாரணமானது ஆகையால், அவைகளை மாற்றுவதற்கும் வழியுண்டு. மக்கள் யாவரும் இயற்கையுடன் பயணிக்கின்றார்கள். நோய்கள் வந்தால், கண்டபடி நெஞ்சத்தில் கற்பனைகளை வளர்த்தலாகாது. அச்சம், சந்தேகம், கற்பனை என்பன பிறரது வதந்திகளால்த்தான் பெரும்பாலும் உருவாகின்றன. இதனால் மக்கள் அதிகளவில் பாதிப்புகளுக்கு உட்படுகின்றார்கள்.

நல்லதை நினைக்க வேண்டும். வாழ்க்கை, வெறுப்பகளுக்குள்ளும் குழப்பங்களுக்குள்ளும் உள்ளது என எண்ணலாகாது. என்றும் சுகதேகியாக, சந்தோஷமாக அமைதி நிலையில் வாழ்வோம் என நம்பிக்கை கொள்ளவும்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# விக்னேஸ்வரனின் கடிதம் எழுதும் முனைப்பு!



புருஜோத்தமன் தங்கமயில்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் ஒன்றை அனுப்பும் முனைப்போடு தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன், ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளோடு பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறார். கடிதத்தின் முதல் வரைபு விக்னேஸ்வரனால், ஏற்கனவே ஏனைய கட்சிகளின் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டு, அதில் திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்தக் கடிதத்தில் யார் யார் இதுவரையில் கையெழுத்திட்டிருக்கிறார்கள் என்பது இதுவரையில் வெளியிடப்படவில்லை.

விக்னேஸ்வரனின் முன்னெடுப்பில் கையெழுத்திடுவது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் மாற்றுக் கருத்துக்கள் உண்டு. அவ்வாறானதொரு கடிதத்தில் கட்சியின் தலைவராக மாவை சேனாதிராஜா கையெடுத்திடுவாரா என்பது இதுவரை சந்தேகமே. ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாக ஒருங்கிணைந்திருக்கும் கட்சிகளில் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கடிதத்தில் கையெழுத்திடத் தயாராக இருக்கிறார்.

ஆனால், ரெலோ அமைப்புக்குள் விக்னேஸ்வரன் முன்மொழியும் கடிதத்தில் கையெழுத்திடுவது, அவரை மறைமுகமாகத் தலைவராக ஏற்க வைத்துவிடும் என்கிற குழப்பம் காணப்படுகின்றது. சிலவேளை, அந்தக் கடிதத்துக்குச் சாதகமான பதிலை நரேந்திர மோடி வழங்கி, புதுடெல்லிக்குத் தமிழ்த் தேசியக் கட்சிகளை அழைத்தால், அதன் தலைமைப் பொறுப்பாளர் போல, விக்னேஸ்வரன் முன்னிறுத்தப்படும் வாய்ப்பு ஏற்பட்டுவிடும். ஜனநாயகப் போராளிகள், என்.சிறிகாந்தா, சிவாஜிலிங்கம் ஆகியோரின் தமிழ்த் தேசியக் கட்சிக்குக் கடிதத்தில் கையெழுத்திடுவது குறித்து எந்த பிரச்சினையும் இல்லை.

கடந்த பொதுத் தேர்தலில் ராஜபக்ஷக்கள் ஆட்சியமைத்த பின்னணியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை புதுடெல்லிக்கு அழைத்து பேசும் முடிவோடு மோடி இருந்தார். அதற்கான அழைப்பும் விடுக்கப்பட்டது. ஆனால், வெவ்வேறு காரணங்களைச் சொல்லி, கூட்டமைப்பின் தலைவராக இருந்த இரா.சம்பந்தன் அந்தச் சந்திப்பைத் தவிர்த்துவிட்டார். அதனால், தமிழ்த் தேசியக் கட்சிகள் மோடியைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படாமல் போனது.

இது, இந்தியாவை பெரும் எரிச்சற்படுத்தியது. அதன் விளைவுகளின் ஒன்றாகவே, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான அழுத்தத்தை இந்தியா வழங்கக் கோரும் கடிதம் ரெலோவினால் எழுதும் படலம் ஆரம்பமாகியது. 13ஆவது திருத்தத்தைத் தனித்துக் குறிப்பிட்டு எழுதப்படும் கடிதத்தில் தங்களால் கையெழுத்திட முடியாது என்று இரா.சம்பந்தனும் தமிழரசுக் கட்சியும் அறிவித்தன. எனினும் ரெலோ அப்போது விக்னேஸ்வரன், சித்தார்த்தன் உள்ளிட்டவர்களின் பங்களிப்போடு கடிதத்தை எழுதும் முனைப்பில் ஈடுபட்டது. இறுதியில், நீண்ட இழுபறிகளுக்குப் பின்னர், ரெலோ ஒருங்கிணைத்த கூட்டங்களில் இரா.சம்பந்தன் கலந்து கொண்டு, சமஷ்டிக் கோரிக்கையே தமிழர்களின் அபிப்பிராயம் என்பதைக் கோடிட்டு, உடனடியாக 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும் என்றவாறான கடிதமொன்றில் கையெழுத்திட்டார். அது அப்போது இந்தியத் தூதரகம் ஊடாக புதுடெல்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்தக் கடிதம், அவசர அவசரமாக எழுதப்பட்ட பின்னணியில் இந்தியா இருந்தது என்பது தமிழ் அரசியல் பார்வையாளர்களின் எண்ணம்.

இந்தியா தன்னுடைய சொல்லை ஒருபோதும் தட்டாத ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எப் உள்ளிட்டவற்றைக் கொண்டு கடந்த காலங்களில் பல்வேறு அரசியல் இராஜாங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றது.

அதன் ஒரு பகுதியாகவே,

இரா.சம்பந்தனையும் தமிழரசுக் கட்சியின் முடிவெடுக்கும் தலைவர்களையும் எச்சரிக்கும் வகையில் ரெலோவை முன்னிறுத்தி, 13ஆவது திருத்தத்துக்கான கடிதம் இந்தியாவுக்கு எழுத வைக்கப்பட்டது. அதன்தொடர்ச்சியாக, கூட்டமைப்புக்குள் ஏற்கெனவே நீறுபூத்த நெருப்பாக இருந்த பிணக்குகள் பெரியளவில் பற்றி எரிந்தன. இறுதியாக, கடந்த வருடத்தில் கூட்டமைப்பு கிட்டத்தட்ட தன்னுடைய 18 வருட கால ஆயுளை இழந்தது. இன்றைக்குத் தமிழரசுக் கட்சி தனி வழியிலும், ரெலோ, புளொ ட், ஈபிஆர்எல்எப் உள்ளிட்ட கட்சிகள் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாகவும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து பிரிந்து நின்ற விஸ்வலிங்கம் மணிவண்ணன் குழுவை தன்னோடு இணைந்து கொண்ட சி.வி.விக்னேஸ்வரன் தனியாகவும் நிற்கிறார். எதிர்வரும் ஆண்டு விரும்பியோ விரும்பாமலோ தேர்தல்கள் நிறைந்த ஆண்டாக இருக்கப் போகின்றது. அப்படியான நிலையில், கட்சிகளும் அதன் தலைவர்களும் தேர்தலை நோக்கிய அரசியல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்கள் தவிர்க்கப்பட முடியாதது. அதன் ஒருபடியாகவே, விக்னேஸ்வரன் இப்போது மோடிக்கு கடிதம் எழுதும் விடயத்தைக் கையில் எடுத்திருக்கின்றார்.

வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்த காலத்தில் விக்னேஸ்வரன், நல்லாட்சி அரசாங்கத்தை மோசமாக விமர்சித்துக் கொண்டிருந்தார். அப்போது, பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்க ஒரு மோசடியாளர், ஏமாற்றுக்காரன் என்று கூறிக் கொண்டார். தமிழ் மக்கள் பேரவையின் தலைவராக அவர் மாறி நின்று, எதிர்ப்பு அரசியலின் அடையாளமாக மாற எத்தனித்துக் கொண்டிருந்தார்.

ஆனால், ராஜபக்ஷக்கள் கடந்த ஆண்டு மக்களால் விரட்டியடிக்கப்பட்டதும், ரணில் ஜனாதிபதியானார். அன்று முதல் அவரை நல்லவர், வல்லவர் என்று புகழ்பாடும் வேலைகளில் விக்னேஸ்வரன் ஈடுபட்டார்.

ரணில் 13ஆவது திருத்தத்தை முன்னிறுத்த தன்னுடைய ஜனாதிபதி தேர்தலுக்கான ஆட்டத்தை ஆரம்பித்தபோது, அதில் முக்கிய பங்காளராக விக்னேஸ்வரன் இருந்தார். அவர், ரணிலை பலமுறை தனியாகச் சந்தித்துப் பேசினார். தமிழர் பிரச்சினை என்றால்,

இரா.சம்பந்தன், தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியவற்றைத் தவிர்த்துக் கொண்டு ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் விக்னேஸ்வரன் ரணிலால் முன்னிறுத்தப்பட்டார். அது, விக்னேஸ்வரனின் நிறம் மாறும் அரசியலாகத் தமிழ்ப் பரப்பில் உணரப்பட்டது.

குறிப்பாக, விக்னேஸ்வரனை, கடந்த காலங்களில் இரா.சம்பந்தனுக்கு மாற்றான தலைவராக முன்னிறுத்திய பேரவையின் மூளையாக செயற்பட்டவர்களினாலேயே, அப்படியான விமர்சனங்கள் முன்னெழுந்தன. அது, தமிழ் மக்கள் மத்தியிலும் செல்வாக்கு செலுத்தியது. இதனால், சற்று பதற்றமடைந்திருந்த விக்னேஸ்வரன், இப்போது புதிய உத்தியோடு ஆடிக்கொண்டிருக்கிறார்.

இந்தியா அடுத்த ஆண்டு மக்களவைத் தேர்தலைச் சந்திக்கப் போகின்றது. கடந்த காலத் தேர்தல்களைவிட இம்முறை, காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அவரை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது. அப்படியான நிலையில், அவர் அவர், விக்னேஸ்வரனின் கடிதங்களை எல்லாம் கணக்கில் எடுத்து, அழைத்துப் பேசுவார் என்பதெல்லாம் எதிர்பார்க்க முடியாத ஒன்று.

ஆனால், விக்னேஸ்வரனைப் பொறுத்த வரையில், தான் முன்னெடுத்த கடிதம் எழுதும் முனைப்பு வெற்றிபெற்றால், மோடியைச் சந்திக்கும் சூழல் ஏற்படலாம் என்று நினைக்கிறார். அப்படியான நிகழ்வு நிகழ்ந்தால் வயது மூப்பு உடல்நலக்குறைவு ஆகியவற்றினால் சம்பந்தன் டெல்லி வரும் வாய்ப்புக்கள் இல்லை.

அதனால், அழைப்பை ஏற்றுச் செல்லும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் குழுவுக்கு தான் தலைமை ஏற்பது போன்ற தோற்றம் ஏற்படும். அது, அடுத்த பொதுத் தேர்தலில் தன்னை முன்னிறுத்துவதற்கு உதவும் என்று நினைக்கிறார்.

ஏனெனில், கடந்த பொதுத் தேர்தலில் அவர் வெற்றிபெற்றது உதிரிகளின் வாக்குகளினால். குறிப்பாக, அவரது கூட்டணியின் இருந்த அருந்தவபாலன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம் ஆகியோரின் வாக்குகளையும் சேர்த்துத் தான் ஒரு ஆசனத்தை வெற்றிபெற முடிந்தது.


ஆனால், இப்போது அவரோடு அவர்கள் யாரும் இல்லை. வாக்கு சேகரிப்பதற்கு அவரினால் களப்பணி ஆற்றவும் முடியாது. அவருக்கு இப்போது இருக்கும் ஒரே ஆறுதல் மணிவண்ணன் தலைமையிலான அணியினர்.

அந்த அணியினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை தோற்கடிப்பதையே முழுநேர வேலையாக எடுத்துக் கொள்ளும். அவர்களிடம் விக்னேஸ்வரனின் வெற்றிபற்றிய எதிர்பார்ப்பு பெரியளவில் இல்லை.

மணிவண்ணனின் வெற்றிபற்றி சிந்திப்பார்கள். அப்படியான நிலையில், விக்னேஸ்வரனின் ஆலோசகர்கள், புதிய திட்டத்தை வழங்கி, இந்தியாவுக்கு கடிதம் எழுதி ஒருநாளில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் ஆகிவிடுங்கள் என்றிருக்கிறார்கள். ஆனால், அதனை உணர்ந்து கொண்டுவிட்ட ஏனைய கட்சிகள் தலைவர்கள் கொஞ்சம் சுதாகரித்துக் கொண்டுதான் செயற்படுகிறார்கள்.

ஆனால், அவர்களில் பலர் இந்தியாவின் செல்லப்பிள்ளைகள் என்பதால், மோடிக்கான விக்னேஸ்வரனின் கடிதத்தில் கையெழுத்திடலாம். மற்றபடி அந்தக் கடிதத்தினால் தமிழ் மக்களுக்கான பலன்கள் விளைந்துவிடும் என்றெல்லாம் யோசிக்கும் அளவுக்கு இங்கு யாரும் இல்லை. அதற்கு மக்களிடம் நேரமும் இல்லை.

## கடிதங்கள்



### பன்றி வளர்ப்பால் மக்கள் அசௌகரியம்

கிளிநொச்சி - பொன்னகர் மத்தி கிராமத்தில் மக்கள் குடியிருப்புக்குள் பன்றி வளர்ப்பதன் காரணமைாக சுற்றுப்புறச் சூழலில் தம்மால் வாழ முடியாத அளவில் துர்நாற்றம் வீசுகிறது என பொது மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.


இது தொடர்பில், குறித்த பன்றி வளர்ப்பாளரிடம் பல தடவைகள் எடுத்துக் கூறி அதற்கேற்ற வகையில் முறையாக வளர்ப்பில் ஈடுபடுமாறு தெரிவித்தும் அவர் அதனை கவனத்தில் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கும் பொதுமக்கள், இதன் காரணமாக வரும் துர்நாற்றத்தால் தம்மால் வீடுகளில் வசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் சமைத்து சாப்பிட முடியாத அளவுக்கு துர்நாற்றம் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். தற்போது மழை பெய்து வருவதனால் பன்றியின் கழிவுகள் நீரில் கழப்பதனாலும், துர்நாற்றம் வழமைக்குமாறாக மிக அதிகமாக காணப்படுகிறது என்றும் பொதுமக்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கரைச்சி பிரதேச பொறுப்பு வைத்திய அதிகாரி மற்றும் கரைச்சி பிரதேச சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகியோரிடம் தொடர்பு கொண்டு வினவியபோது, இது தொடர்பில் தாங்கள் உரியகவனம் செலுத்துவதாக தெரிவித்துள்ளனர். அத்தோடு இன்றைய தினம் பொலிஸாரும் பொதுமக்களின் முறைப்பாட்டிற்கு அமைவாக நேரில் சென்று நிலைமைகளை பார்வையிட்டு சென்றுள்ளனர்.

மு.தமிழ்ச்செல்வன்



# செம்புவத்த ஏரி மறைக்கப்பட்டதா?



பீ.சமித்தா
யாழ்.
பல்கலைக்கழகம்
ஊடக கற்கை நெறி

இலங்கையானது இயற்கை வளங்களால் அழகு பெற்று சுற்றுலாத் துறைக்கு ஏற்ற இடங்களில் ஒன்றாக முதன்மை பெறுகின்றது என்றே கூறலாம். இங்குக் காணப்படும் இயற்கை வளங்களால் நிறைந்த சுற்றுலாத் தலங்கள் சில மானிட செல்வாக்கினால் மாற்றங்களுக்கு உட்பட்டு பிரசித்தி பெற்ற சுற்றுலா தளங்களாக வளர்ச்சி அடைந்துள்ளன. அத்தகையதாக பல சுற்றுலா தளங்கள் பிரபல்யம் அடைந்திருந்தாலும் அவற்றின் சில இடங்கள் பிரசித்தமடையாத நிலையிலும் உள்நாட்டு மக்களிடத்தில் கூட அறியப்படாத நிலையிலுமே அதிகமாகக் காணப்படுகின்றன.

சில வேளைகளில் உள்நாட்டுப் பகுதிகளில் மிகவும் சாதாரணமாகக் காட்சியளிக்கக் கூடிய இடங்கள், சுற்றுலாப் பயணிகளினால் அதிகம் கவரப்படக் கூடியதாகவும் காணப்படுகின்றது. இவ்வாறாக இயன்றளவில் மறைக்கப்பட்ட நிலையில் இலங்கையின் வடக்கு, கிழக்கு, தென் மற்றும் மலையகப் பகுதிகளில் அதிகமான இடங்கள் காணப்படுகின்றன. அதன் சாயலிலேயே மாத்தளை மாவட்டத்தில் காணப்படும் செம்புவத்த நீர்த்தேக்கமானது வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மத்தியில் பிரபல்யம் அடைந்ததாகக் காணப்பட்டாலும் உள்நாட்டு மக்கள் மத்தியில் இன்றும் அறியப்படாத நிலையிலேயே காணப்படுகிறது.

செம்புவத்த ஏரியானது இலங்கையின் மாத்தளை மாவட்டத்தில் எல்கடுவவில் அமைந்துள்ளது. இது காம்பெல்ஸ் வனப்பகுதியின் எல்லையாகவும் 1140 மீட்டர் உயரத்திலும் அமைந்துள்ளது. இயற்கை நீரூற்றிலிருந்து மனிதனால் உருவாக்கப்பட்ட ஏரியாகும். இதனைச் சுற்றி ஒரு இயற்கை நீச்சல் குளமும் அமைந்துள்ளது. இந்த ஏறியானது ஒன்பது மீட்டர் (30 அடி) முதல் 12 மீட்டர் (39 அடி) வரை ஆழம் கொண்டது எனவும் நம்பப்படுகிறது.

இப்பிரதேசத்தின் தேவதாகு மரங்கள் மற்றும் தேயிலையால் மூடப்பட்ட சரிவுகளுடன் கூடிய மூடுபனி மற்றும் குளிர்ச்சியான வளிமண்டலம் சுற்றுலாப் பயணிகளை அதிகம் ஈர்த்துள்ளது எனலாம். இங்கு ஆண்டு வெப்பநிலை சுமார் 20 பாகை செல்சியஸ் ஆகவும் மழைப்பொழிவு சுமார் 2,000 மில்லி மீட்டராகவும் காணப்படுகின்றது.

இந்த செம்புவத்த ஏரி உருவானதற்கு ஒரு சிறிய வரலாறு ஒன்றும் உண்டு. அதாவது ஆங்கிலேயர்கள் இப்பகுதியில் தேயிலை சாகுபடி தொடங்கி ஏரி இருக்கும் இடத்தில்தான் போலோ விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்தினர். 1949ஆம் ஆண்டு அதன் அருகில் தேயிலை தொழிற்சாலை நிறுவப்பட்டது. அதன்பின் தொழிற்சாலைக்கு மின்சாரம் தயாரிக்க ஏரி கட்டப்பட்டது என கூறப்படுகின்றது. இவ்வாறு கட்டப்பட்ட தொழிற்சாலை மறைந்து நீண்ட காலமான பின்னும் ஏரியின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் மூலம் அப்பகுதியில் உள்ள வீடுகள் இயன்றளவிலும் இயங்குகின்றன எனவும் கூறப்படுகிறது.

கோடைகால குடிசைகள், விருந்தினர் மாளிகை, நீச்சல் குளம் என 2005ஆம் ஆண்டு சுற்றுலா தளமாக இந்த ஏரி உருவாக்கப்பட்டது. இது தற்போது எல்கடுவ தோட்டங்களாலேயே நிர்வகிக்கப்படுகின்றது. ராட்லி திசாஜ் என்பவராலேயே இந்த பாரிய மாற்றத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு ஏரி மற்றும் சுற்றுப்புறங்கள் புனரமைக்கப்பட்டதுடன், ஏரிக்கு அருகிலுள்ள நீரூற்றுக்களுடன் இந்த ஏரியை இணைத்தார் எனவும் கூறப்படுகின்றது.

செம்புவத்த நீர்த்தேக்கத்தின் இயற்கை அழகு மற்றும் காலநிலையைக் கண்டு பிரமித்து இலங்கைக்கு வரும் அரபு மொழி பேசும் சுற்றுலாப் பயணிகள் 'ஜன்னதி துன்யா' அல்லது 'பூமியின் ஒரு சொர்க்கம்' என்றும் சிறப்பித்து அழைத்தனர். இந்த ஏரிப்பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடிய ஜிப்லைனீங், கேனோயிங், படகு சவாரி, இயற்கை மலையேற்றம் மற்றும் பறவைகளைப் பார்ப்பது போன்றனவும் அமைக்கப்பட்டுள்ளன. இதனோடு தேயிலைத் தோட்டங்களின் வழியாகப் பார்க்கச் செல்வதனால் பல கோடைகால குடிசைகள் மற்றும் ஓய்வெடுக்கும் பகுதிகளும் தினசரி பார்வையாளர்களுக்காக அருகிலேயே அமைக்கப்பட்டுள்ளது. மேலும் உணவுகள் வசதியின்மையால் உணவுப்பொருளைக் கொண்டு வருவதற்கும் சமையல்காரர் மற்றும் சமையல் உபகரணங்கள் வசதியுடன் கபானாக்கள் மற்றும் முகாம் வசதிகளும் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமையும் காணக்கூடியதாக இருந்தது.


சுற்றுலாப் பயணிகளுக்காக இவ்வாறான வசதிகள் மேம்படுத்திக் கொடுக்கப்பட்டாலும் இங்கு பல கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. அதாவது 40 அடி வரை ஆழம் உள்ளதால் ஏரியில் குளிப்பதற்கும் நீந்துவதற்கும் அனுமதி இல்லை என உறுதிப்பாட்டுடன் கூறப்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்வதற்கு இதனோடு நீச்சலுக்காக ஒரு இயற்கை நீரூற்றின் மூலம் ஒரு குளமும் காணப்படுகின்றது. இதில் சவாரி செய்வது முக்கிய பொழுதுபோக்கு சுற்றுலாப் பயணிகளால் கொள்ளப்படுகின்றது.

இளைய பயணிகளுக்காக தனி விளையாட்டுப் பகுதி மற்றும் வில்வித்தை வீச்சு போன்றனவும் இங்கு கிடைக்கப் பெறுகின்றது பறவைகளை பார்க்கும் பாதைகள் மற்றும் மலை ஏற்றம் தொடர்பாக *Epic Sri Lanka Holidays* இல் ஏற்பாடு செய்து கொள்ளும் வசதிகளும் இங்கு உள்ளன.


இவ்வாறாக செம்புவத்த நீர் தேக்கமானது அன்றைய காலகட்டத்தில் இருந்ததை காட்டிலும் இன்று மென்மேலும் மாற்றங்களுக்கு உட்பட்டு சுற்றுலாத் தலமாகவே மாற்றமடைந்துள்ளது. இவ்வாறு இருந்தும் உள்நாட்டு மக்கள் மத்தியில் கூட அறியப்படாத சுற்றுலா தளமாகவே இது இன்றளவிலும் காணப்படுகின்றது. ஆரம்பத்தில் உள்நாட்டு மக்கள் மத்தியில் பிரபல்யமடைய வைப்பதன் வாயிலாகவே வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மத்தியிலும் இதனை பிரபல்யம் அடைய வைக்கக்கூடியதாகக் காணப்படும்.

இவ்வாறான விளம்பரப்படுத்தலினால் சுற்றுலாதுறையின் வருமான வீதம் அதிகரிப்பதுடன் இந்த நீர் தேக்கத்தினை சூழவுள்ள கிராமங்களும் வீதிகளும் அபிவிருத்தி அடைவதற்கான வாய்ப்புகளும் உண்டு. மேலும் தனி மனித வருமான வீதங்களை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளும் இங்கு ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். செம்புவத்த நீர் தேக்கமானது மர்மமாக மறைக்கப்பட வேண்டிய விடயம் அல்ல மாறாக அது பிரபல்யப்படுத்த வேண்டிய இடமே ஆகும். இதற்கு அரசாங்கமே உரிய செயற்பாடுகளை மேற்கொண்டு இந்நீர்தேக்கத்தினை உலகளாவிய ரீதியில் அடையாளப்படுத்த ஒரு வழிகோலாக அமைய வேண்டும்.









ஆரம்ப நிலை கல்வியில் காணப்படும்

# பிரச்சினைகளும் மாற்றங்களும்



நவரத்தினராஜா
துர்க்காதேவி
( கலை கலாசாரபீடம்
கிழக்கு பல்கலைக்கழகம்)

"இளமையின் கல்வி சிலையில் எழுத்து" எனும் பழமொழிக்கு இணங்க ஒவ்வொரு பிள்ளையும் தமது சிறுவயதிலேயே அதாவது ஆரம்பகல்வி பருவத்திலேயே கல்வியை சரியான முறையில் கற்றுத்தேர வேண்டும். ஆரம்பகல்வி உலகளாவிய ரீதியில் அதிக கவனத்தை பெற்றுள்ளது. ஒட்டுமொத்தமான கல்வி விருத்தியின் அடித்தளம் ஆரம்பகல்வியே ஆகும். அந்த வகையில் இலங்கையை பொறுத்தவரையில் முறை சார்ந்த கல்வியின் முதல் கட்டமாக அமைவது 1-5 வரையுள்ள வகுப்புகளாகும்.

நிறுவன அமைப்பிற்கு உட்பட்டு முறையான கல்வி பயிலத் தொடங்கும் நிலை ஆரம்பக்கல்வி பருவமாகும். இங்கு சராசரியாக 5 ஆண்டுகள் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். கற்றலுக்கு வாசிப்பு, எழுத்து, எண், கணிதம் என்பன அடிப்படையாக அமைகின்றது. இவற்றோடு சமூக அறிவு, சுகாதார அறிவு, சூழல் அறிவு, உடற்கல்வி செயற்பாடுகள் போன்ற பாடங்களும் மாணவர்களின் கற்றல் அனுபவத்திற்கு அவசியமாக அமைகின்றது. அந்த வகையில் இவ்வாறான முதலாம் நிலை கல்வி அபிவிருத்தி மூன்று நிலைகளில் அமைந்துள்ளது. இவ்வாறு கல்வி வழங்கப்பட்ட போதிலும் அதில் பல பிரச்சினைகள் தோன்றுவதையும் நாம் அவதானிக்க முடிகின்றது.

இன்றைய காலகட்டத்தில் பாடசாலைகளை எடுத்துக் கொண்டால் சில பாடசாலைகள் தங்கள் பெயரைத் தக்கவைத்துக் கொள்ளவும், பெற்றோர்கள் தங்கள் கௌரவத்திற்காகவும் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு அதிகம் அழுத்தம் கொடுக்கின்றனர். இதனால் ஆரம்ப நிலை சார் மாணவர்களின் கற்றல் பாதிப்படைகின்றது. அவர்களை விளையாட்டுக்களில் ஈடுபடவிடாமல் கற்றல், கற்றல் என கல்வியைத் திணிக்கின்றனர். இதனால் கற்றலுக்காக கற்றல் என்பது இங்கு பாதிப்படைகின்றது.

இன்றைய காலகட்டத்தில் ஒரு சில பாடசாலைகளில் அதிகமாக கிராமப்புற பாடசாலைகளில் வாண்மைத்துவமிக்க ஆசிரியர்கள் இன்மையால் ஆரம்பபிரிவு மாணவர்களின் அறிவு விருத்தியானது பாதிப்படைகின்றது. சில பாடசாலைகளில் கற்றல் சார்பான பற்றாக்குறை காணப்படுகின்றது. இதனால் போதியளவு திறமை மாணவர்களிடம் காணப்பட்ட போதிலும் அவர்களிடம் வளப்பற்றாக்குறையினால் அவர்களின் ஆளுமை விருத்தியானது பாதிப்படைகின்றது. இன்றைய காலகட்டத்தில் சில பாடசாலைகளில் ஒரு வகுப்பறைக்கான மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றது. இதனால் பல பிரச்சினைகள் எழுகின்றன. அதாவது இதனால் மெல்ல கற்கும் பிள்ளைகளுக்கு அவதானிக்க முடியாமல் மேலும் மன அழுத்தம் போன்ற பிரச்சினைகளுக்கு வழிவகுப்பதாய் அமைகின்றது.

தரம்-1, தரம்-2 மாணவர்களுக்கு இன்று விளையாட்டுடனான கல்விக்கு முன்னுரிமை கொடுக்காமல் இருக்கின்றனர். விளையாட்டுக்களில் ஈடுபடும்போது மாணவர்களுக்கு மகிழ்வான ஒரு சூழலை அது ஏற்படுத்தும். இது அனுபவ ரீதியான கற்றலுக்கு வழிவகுக்கும் இவ்வாறான செயற்பாடுகள் செயல்படுத்த படாதபோது மாணவர்கள் மகிழ்ச்சியை இழக்கின்றனர். இதனால் மாணவர்களின் இடைவிலகல்களுக்கு பாடசாலை சூழலே வழிவகுகின்றது.

மேலும் தரம்-5 புலமை பரிசிலானது பொருள் வசதி குறைந்த வறுமை நிலையில் காணப்படும் குடும்பங்களின் ஆற்றலுடைய மாணவர்களுக்கு உதவி சம்பளம் வழங்குதல், மதிப்புமிக்க பாடசாலைகளின் இடைநிலை கல்விக்கு மாணவர்களைத் தெரிதல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே நடத்தப்படுகின்றது. ஆனால், இது தற்பொழுது பெற்றோர்களின் கௌரவ பரீட்சையாகவும் மாறுவதையும் இதற்காகப் பிள்ளைகளின் மீது அளவு கடந்த அழுத்தங்களைப் பிரயோகிப்பதையும் அவதானிக்க முடிகின்றது. இவ்வாறான நடவடிக்கையால் பிள்ளையின் இயல்பான நடத்தை ஒடுக்கப்பட்டு ஆரம்பக் கல்வி பருவமே அர்த்தமற்றதாக்கி விடுகின்றது.

எண்ணெழுத்து, வாசிப்பு என்பவற்றைக் கற்பிப்பதே ஆசிரியரின் கடமை என பெற்றோர்கள் கருதுவதால் பிள்ளையின் முழுமையான விருத்தியில் முன்னேற்றுதல் அதன் முழுமையான தொழிற்பாடு என்பதை மறந்து பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு அழுத்தத்தைக் கொடுக்கின்றனர். மேலும், பெற்றோர்கள் ஆசிரியர்களிடையே நெருங்கிய தொடர்பு இன்மையால் பெற்றோர்கள் ஆசிரியர்களை வாரத்துக்கு ஒரு முறையாவது சந்திக்கின்றனரா! பிள்ளையின் ஆளுமை விருத்தி பற்றிய பங்களிப்பைப் பெற்றோர்கள் வழங்குகின்றார்களா! என்பது இன்றைய காலகட்டத்தில் கேள்விக்குறியாகவே உள்ளது. இதனால் பிள்ளையின் செயற்பாடுகள் பற்றி பெற்றோர்களுக்கு தெரிவதில்லை இது இன்றைய காலகட்டத்தில் ஒரு பிரச்சினையாக காணப்படுகின்றது.

ஆரம்ப வகுப்புகளில் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடம் முழுவதுமாக சூழல் சார்ந்த செயற்பாடாகவே ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்று பாடத்தைக் கற்பிக்கும் போது ஆசிரியர் மாணவர்களை வகுப்பறைக்கு வெளியே அழைத்துச் செல்வதில்லை வகுப்பறைக்குள் வைத்து அதனை ஒரு வாசிப்பு பாடமாகவும்,எழுத்து பாடமாகவுமே நடத்திச் செல்வதைப் பெருமளவு அவதானிக்க முடிகின்றது. இன்று ஆரம்ப வகுப்பு மாணவர்களை தனித்தனியே கவனப்படுத்துதல் குறைவாகவே காணப்படுகின்றது.

இதனால் ஒரு மாணவனின் பலம், பலவீனம் என்பன ஆசிரியருக்குத் தெரியப்படுவதில்லை இதனால் அவனது கற்றல் தடைப்படுவதையும் கற்றலில் பிரச்சினைகள் ஏற்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

இன்று ஆரம்ப வகுப்பு மாணவர்களை தனித்தனியே கவனப்படுத்துதல் குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் ஒரு மாணவனின் பலம், பலவீனம் என்பன ஆசிரியருக்குத் தெரியப்படுவதில்லை இதனால் அவனது கற்றல் தடைப்படுவதையும் கற்றலில் பிரச்சினைகள் ஏற்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.மேலும் சிறுவயதிலேயே பிள்ளைகள் புலன் இயக்க செயற்பாடுகளின் ஊடாக சுற்றாடலை ஆய்வு செய்கின்றனர். ஆனால், இன்றைய பாடசாலைகளில் சுற்றாடலுடனும் இசைவாக்கமடைவதற்கான செயல்பாடுகளை பிள்ளைகளுக்கு நேரம் ஒதுக்கப்படுவதில்லை. இதனால் முறைசார் பாடசாலைகளில் ஏற்படும் சவால்களுக்கு மாணவர்கள் முகம் கொடுப்பதற்கான தடை ஏற்படுகின்றது.

தொகுத்து நோக்குகின்ற பொழுது ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கல்வி செயல்பாடுகளில் ஆசிரியர்களும் பெற்றோர்களும் அதிகளவில் செல்வாக்கு செலுத்துவதை அவதானிக்க முடிகின்றது. பிள்ளையின் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் ஆசிரியரும் மாணவர்களும் செயல்பட வேண்டும். ஆரம்ப வகுப்பு மாணவர்கள் கற்றல் தொடர்பான சில பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இதனைத் தீர்ப்பதற்கு ஆரம்பக் கல்வியில் பல மாற்றங்களினை கொண்டு வருதல் வேண்டும். அந்த வகையில் நோக்கினோமானால் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு வாண்மைமிக்க ஆசிரியர்களின் நியமித்தலோடு ஆரம்ப வகுப்புகளில் ஒவ்வொரு மாணவரும் தனித்தனியே கவனிக்கப்படுதல் வேண்டும். அவனது பலம் மற்றும் பலவீனம், தனியாள் வேறுபாடுகள் ஆசிரியரால் கண்டறியப்படுவதுடன் அது தொடர்பில் பெற்றோருக்கும் அறிவூட்டப்படுதல் வேண்டும்.



# அரபு தலைவர்கள் உடனான சந்திப்பு ரத்து

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் செவ்வாய்க்கிழமை (18) இஸ்ரேலுக்கு சென்று ஜோர்டான் மன்னர் அப்துல்லா, எகிப்து ஜனாதிபதி, பாலஸ்தீன தலைவர் ஆகியோரை ஜோர்டான் தலைநகர் அம்மானில் சந்தித்து பேச இருந்தார்.

இதனால் காசா- இஸ்ரேல் போர் நிறுத்தத்திற்கு வாய்ப்பு இருப்பதாக கருதப்பட்டது. இந்நிலையில் மருத்துவமனையில் தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், இந்த பேச்சுவார்த்தை ரத்து செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இஸ்ரேல் பயணத்தை ஜோ பைடன் முடித்துக் கொண்டு அமெரிக்கா திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.



இஸ்ரேல்

## "மருத்துவமனை தாக்குதலுக்கு பயங்கரவாதிகளே காரணம்"

இஸ்ரேல்- ஹமாஸ் இடையிலான போர் தீவிரமடைந்து வரும் நிலையில், இரு பக்கமும் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இஸ்ரேல் போர் விமானங்கள் தெற்கு காசா மீது திங்கட்கிழமை (17) குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதலில் காசா நகரில் உள்ள அல்-அக்லி மருத்துவமனையில் 500 பேர் பலியாகியுள்ளதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், காசா மருத்துவமனை மீதான தாக்குதலுக்கு பயங்கரவாதிகள் வீசிய ரொக்கெட் தாக்குதலே காரணம் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக நேதன்யாகு தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், அல் அக்லி மருத்துவமனை மீதான தாக்குதலுக்கு பயங்கரவாதிகளே காரணம். அவர்கள் வீசிய ரொகக்கெட்கள் குறிதவறி மருத்துவமனை மீது விழுந்ததால் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என குற்றம் சாட்டியுள்ளார்.

## ஐ.நா. கடும் கண்டனம் பலஸ்தீன மக்களுக்கு

ஆதரவாக இஸ்ரேலை கண்டித்தும் அரபு நாடுகளில் போராட்டங்கள் வெடித்துள்ளன.

மருத்துவமனை மீதான இஸ்ரேலின் தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள ஐ.நா மனித உரிமை ஆணையர் வோல்கர் துர்க், " மருத்துவமனைகள் புனிதமானவை, அவை எந்த சூழல்களிலும் பாதுகாக்கப்பட வேண்டியவை. இந்த படுகொலையின் முழு அளவு எங்களுக்கு இன்னும் தெரியவில்லை. ஆனால் தாக்குதல்களும், படுகொலைகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது என்றார்.

இந்த பயங்கர சூழ்நிலையை முடிவுக்கு கொண்டு வர செல்வாக்குள்ள அனைத்து நாடுகளும் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும். குடிமக்கள் பாதுகாக்கப்பட வேண்டும், மேலும் மனிதாபிமான உதவிகள் உரியவர்களை சென்றடைய அனுமதிக்க வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

## பணயக்கைதிகளை பலியெடுக்கும் ஹமாஸ்

காசா பகுதியில் அல் அஹில் மருத்துவமனை மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், 500க்கும் மேற்பட்ட பலஸ்தீனிய பொதுமக்கள் உயிரிழந்தனர்,

இதனையடுத்து, தங்கள் காவலில் உள்ள வெளிநாட்டவர்களை ஹமாஸ் போராளிகள் கொல்லத் தொடங்கியுள்ளனர் என்று அல் ஜசீரா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், ஹமாஸ் அமைப்பினரால் 42 நாடுகளைச் சேர்ந்த பலர் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ளதாகவும்



பல இஸ்ரேலிய- அமெரிக்கர்கள் ஹமாஸின் காவலில் இருப்பதாகவும் அல் ஜசீரா செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால், அவர்களில் 25 பேர் ஹமாஸ் இயக்கத்தினரால் செவ்வாய்க்கிழமை (17) கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும் 14 அமெரிக்க, இஸ்ரேலியர்களை ஹமாஸ் பிணைக் கைதிகளாக பிடித்து வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கென்யா

## பெண்கள் மட்டும் வாழும் கிராமம்

பெரிய நகரங்கள் முதல் குக்கிராமங்கள் வரை உலகம் முழுவதும் எங்கு சென்றாலும் பெண்களும், ஆண்களும் ஓரளவுக்கு சமவிகிதத்தில் வாழ்ந்து வருகின்றனர்.



கென்யா நாட்டின் தலைநகரமான நைரோபியில் இருந்து சுமார் 380 கிலோ மீட்டர் தொலைவில் உமோஜா எனும் கிராமம் உள்ளது. இந்த கிராமத்தில் பெண்கள் மட்டுமே வாழ்கின்றனர். இங்கு ஆண்கள் நுழைவதற்கு தடை விதித்துள்ளனர்.

இந்த பகுதியைச் சேர்ந்த பெண்கள் அனைவரும் மாசாய் என்ற சமூகத்தின் ஒரு பகுதியாக கருதப்படும் சம்பூர் பழங்குடியினத்தை சேர்ந்தவர்களாவர். இந்த கிராமம் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு உருவாகி உள்ளது. இந்த கிராமம் உருவானதன் பின்னணியில் அதிர்ச்சியான தகவல் உள்ளது.

அதாவது, 1990களில் பிரிட்டன் இராணுவ வீரர்கள் சம்பூர் இனத்தை சேர்ந்த பெண்களை பாலியல் பலாத்காரம் செய்ததாகவும், இதன் காரணமாக அந்த பெண்களின் கணவன்மார்கள் அவர்களை ஏற்க மறுத்ததாகவும் கூறப்படுகிறது. இதன் காரணமாக ஆவேசமடைந்த ரெபேக்கா லோலோ சோலி என்ற பெண் 15 பெண்களுடன் சேர்ந்து இந்த கிராமத்தை உருவாக்கியுள்ளார். மேலும் அந்த கிராமத்தில் பெண்களும் அவர்களின் குழந்தைகள் மாத்திரமே வாழ முடியும் ஆண்கள் நுழைவதற்கும் தடை விதித்துள்ளார். இந்நிலையில் தற்போது 40 குடும்பங்கள் அங்கு வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் பாரம்பரியமான மணி மாலைகளை விற்று வருமானம் ஈட்டுகின்றனர்.

மகாராஷ்டிரா

## பெண் குழந்தை பிறந்தால் ரூ.1 இலட்சம்



பெண் குழந்தைகளின் நலனுக்காக ஒவ்வொரு மாநிலமும் ஒவ்வொரு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இந்த சூழலில் தற்போது மகாராஷ்டிரா மாநில அரசு பெண் குழந்தைகளுக்கான புதிய திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது.

அதன்படி, மாநிலத்தில் மஞ்சள் மற்றும் ஆரஞ்சு நிற ரேஷன் அட்டைகளை வைத்துள்ள குடும்பத்தில் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் பெண் குழந்தைகள் பிறந்தால் முதலில் ஐந்தாயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும். அதன் பிறகு ஒன்றாம் வகுப்பில் சேரும்போது 6 ஆயிரம் ரூபாய், ஆறாம் வகுப்புக்குச் செல்லும்போது 7000 ரூபாய், ஒன்பதாம் வகுப்பில் எட்டாயிரம் ரூபாய், இறுதியாகக் குழந்தைக்கு 18 வயது பூர்த்தி அடைந்த பிறகு 75 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் மொத்தம் ஒரு லட்சம் ரூபாய் நிதி உதவி பெண் குழந்தைகளுக்கு அரசு சார்பில் வழங்கப்படுகின்றது. இதனைப் பெண் குழந்தையின் எதிர்கால கல்வி மற்றும் திருமணம் போன்ற அத்தியாவசிய தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என மாநில அரசு தெரிவித்துள்ளது.

சென்னை

## ரூ.20 இலட்சத்தை கறந்த இடியப்பம்

சென்னையை சேர்ந்த தம்பதி ஒன்றுக்கு கணவனின் குடிப்பழக்கத்தால் அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், ஒருநாள் மனைவியிடம் இடியப்பம் செய்து தரும்படி கணவன் கேட்டுள்ளார். ஆனால் வீட்டில் இடியப்பம் செய்யும் குழல் இல்லை. எனவே இடியப்பம் செய்ய முடியாது என்று மனைவி கூறியிருக்கிறார். இதனால் கோபமடைந்த அவர் மனைவியை அடித்துள்ளார்.

இதுபற்றி மனைவி பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார். இந்த வழக்கு சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் நடந்து வந்தது.

வழக்கு விசாரணையில், திருமணம் முடிந்த காலத்தில் இருந்தே உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் தான் துன்பங்களை அனுபவித்து வருவதாகவும். கடந்த 2018இல் தான் ஆசையாய் அவரது பிறந்தநாளுக்கு 'காப்பி கப்' வாங்கி கொடுத்ததை சிகரெட் சாம்பல் கொட்டும்



குவளையாக பயன்படுத்தி எனது உணர்வுகளை புண்படுத்தினார் என்றும் நீதிமன்றத்தில் கூறியுள்ளார்.

மனைவியின் குற்றச்சாட்டை மறுத்த கணவன், தனக்கு வீட்டில் உணவு சமைத்து தருவது கிடையாது. இதனால் அடிக்கடி வெளியே சாப்பிட்டதாக கூறியுள்ளார். மேலும் அடிக்கடி தற்கொலை செய்து கொள்வேன் என்று மிரட்டியதாகவும் கூறியுள்ளார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி தனது பொருளாதார நிலைமையை மறைத்து ஒரு பெண்ணை திருமணம் செய்து உணர்வு ரீதியாக துன்புறுத்தி குடும்ப வன்முறைக்கு ஆளாக்கியதற்காக மனைவிக்கு இழப்பீடாக ரூ.20 இலட்சம் வழங்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

உலகக் கிண்ணம்:

# தென்னாபிரிக்காவை வீழ்த்திய நெதர்லாந்து

இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், தரம்சாலாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மழை காரணமாக 43 ஓவர்கள் கொண்டதாக அமைந்த போட்டியில் தென்னாபிரிக்காவை நெதர்லாந்து வீழ்த்தியது.



ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

நெதர்லாந்து: 245/8 (43 ஓவ.) (துடுப்பாட்டம்: ஸ்கொட் எட்வேர்ட்ஸ் ஆ.இ 78 (69), றொலெஃப் வான் டர் மேர்வே 29 (19), அர்யன் டுட் ஆ.இ 23 (09), டெஜா நிடமனுரு 20 (25) ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்கோ ஜன்சன் 2/27, ககிஸோ றபாடா 2/56, லுங்கி என்கிடி 2/57, கேஷவ் மஹராஜ் 1/38)

தென்னாபிரிக்கா: 207/10 (42.5 ஓவ.) (துடுப்பாட்டம்: டேவிட் மில்லர் 43 (52), கேஷவ் மஹராஜ் 40 (37), ஹென்றிச் கிளாசென் 28 (28), ஜெராட் கொயட்ஸி 22 (23) ஓட்டங்கள். பந்துவீச்சு: லோகன் வான் பீக் 3/60, றொலெஃப் வான் டர் மேர்வே 2/34, பஸ் டீ லீட் 2/36, கொலின் அக்கர்மன் 1/16)

போட்டியின் நாயகன்: ஸ்கொட் எட்வேட்ஸ்

இந்நிலையில், பூனேயில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பங்களாதேஷை இந்தியா எதிர்கொள்ளவுள்ளது.



தெற்காசிய விளையாட்டுப் போட்டியில்

## விவேகானந்தா கல்லூரி சாதனை

■ வடமலை ராஜ்குமார்

தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரி எட்டு தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளது. இவ்வாறு சாதனை படைத்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

உலக ஐக்கிய சிலம்ப சம்மேளனத்தின் ஒழுங்கமைப்பில் இரண்டாவது முறையாக இடம்பெற்ற தெற்காசிய சிலம்ப போட்டிகளின் முடிவில் உவர்மலை விவேகானந்தா கல்லூரி மாணவர்கள் எட்டு (8) தங்கம், எட்டு (8) வெள்ளி, ஐந்து (5) வெண்கலம் உள்ளடங்கலாக இருபது (21) பதக்கங்களை சுவீகரித்துக் கொண்டுள்ளனர்.

பதக்கங்களைப் பெற்றவர்களின் விபரம்

தொடு சிலம்பம் பிரிவு
உ. பவிகாஷ் - தங்கப் பதக்கம்
சு. சுபீட்சகன் - வெள்ளிப் பதக்கம்
ச. கோபிகா - வெள்ளிப் பதக்கம்
ச. சந்தோஷ் - வெள்ளிப் பதக்கம்
வி. கேஷிகன் - வெள்ளிப் பதக்கம்
ர. ஷாம் டேவிட் - வெண்கலப் பதக்கம்
கு. தருஷன் - வெண்கலப் பதக்கம்

ஒற்றைச் சிலம்பம் பிரிவு
சு. சுபீட்சகன் - தங்கப் பதக்கம்
ச. கோபிகா - தங்கப் பதக்கம்
வி. கேஷிகன் - வெள்ளிப் பதக்கம்
ர. ஷாம் டேவிட் - வெள்ளிப் பதக்கம்
உ. பவிகாஷ் - வெள்ளிப் பதக்கம்
ச. சந்தோஷ் - வெண்கலப் பதக்கம்
கு. தருஷன் - வெண்கலப் பதக்கம்

வேல் கம்பு பிரிவு
வி. கேஷிகன் - தங்கப் பதக்கம்
ச. சந்தோஷ் - தங்கப் பதக்கம்
சு. சுபீட்சகன் - தங்கப் பதக்கம்
ச. கோபிகா - தங்கப் பதக்கம்
ர. ஷாம் டேவிட் - தங்கப் பதக்கம்
உ. பவிகாஷ் - வெள்ளிப் பதக்கம்
கு. தருஷன் - வெண்கலப் பதக்கம்



உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள்:

## உருகுவேயிடம் தோற்ற பிரேஸில்

தென் அமெரிக்க கால்பந்தாட்டச் சம்மேளன உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில், உருகுவேயில் நேற்றுக் காலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் பிரேஸில் தோற்றது.

உருகுவே சார்பாக டர்வின் நுனேஸ், நிகொலஸ் டி லா குறூஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில், வெனிசுவேலாவில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் சிலி தோற்றது.

இதேவேளை ஈக்குவடோரில் நடைபெற்ற அவ்வணிக்கும், கொலம்பியாவுக்குமிடையிலான போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.



யூரோ தகுதிகாண் போட்டிகள்:

## இத்தாலியை தோற்கடித்த இங்கிலாந்து

ஐரோப்பியக் கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோ கிண்ணத் தொடருக்கான தகுதிகாண் போட்டிகளில், தம் நாட்டில் புதன்கிழமை (18) அதிகாலை நடைபெற்ற இத்தாலியுடனான போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து வென்றது.

இங்கிலாந்து சார்பாக ஹரி கேன் இரண்டு கோல்களைப் பெற்றதோடு, மார்க்கஸ் றஷ்ஃபோர்ட் ஒரு கோலைப் பெற்றிருந்தார். இத்தாலி சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜல்லுயுக்கா ஸ்கமக்கா பெற்றிருந்தார்.

இதேவேளை, குறித்த போட்டியில் வென்றதன் மூலம் யூரோ கிண்ணத் தொடருக்கு இங்கிலாந்து தகுதி பெற்றுள்ளது.

அட்டாளைச்சேனை கோல்ட் ஸ்டார் வி. க தொடர்:

## சம்பியனானது அம்பாறை டையமன்ட்

■ எம்.எப். றிபாஸ்

அட்டாளைச்சேனை கோல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த இரவு நேர கரப்பந்தாட்டத் தொடரில் அம்பாறை டையமன்ட் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியுள்ளது.

25 அணிகள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் அட்டாளைச்சேனை அஷ்ரப் விளையாட்டுக் கழகத்தை வென்றே டையமன்ட் சம்பியனானது.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 19 ஒக்டோபர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.